DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | தாமரை செல்வி | Caste: | |
| Husband Name: | முனியசெல்வம் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 09.04.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் .)

<u>**முதன்மை விசாரணை**</u>

எனது சொந்த ஊர் கமுதி தாலுகா . நெறிஞ்சிப்பட்டி கிராமம். என்னை நரிக்குடியில் திருமணம் செய்து கொடுத்தனர். நான் என் கணவரை விட்டு பிரிந்து என் அம்மா, அப்பாவுடன் தற்போது நெறிஞ்சிப்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர். முகேஷ்ராஜ், சந்தோஷ்ராஜ், நான் டெய்லரிங் வேலை செய்து வருகிறேன். நான் பட்டியல் இனத்தைச் சேர்ந்த புதிரை வண்ணான் சாதியைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சாட்சிகள் முருகவேல், கரண், முனீஸ்வரி, கோட்டைச்சாமி, முனியசாமி, போஸ் ஆகியோரைத் தெரியும். போஸ் என் தகப்பனார். முருகவேல் என் மாமா. எனக்கு ஜெயந்தி மருத்துவமனையில் இரண்டு வருடங்களுக்கு முன்பு குடலிறக்கம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. எனக்கு வலி இருந்ததால் என் தங்கை வீட்டுக்காரர் முருகவேல் மருத்துவமனைக்கு 29.01.2024 ல் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். கமுதியில் இருந்து புறப்பட்டு

அருப்புக்கோட்டை செல்லும் ரோட்டில் காலை சுமார் 11.30, 11.45 மணியளவில் சென்றுகொண்டிருந்தோம். முனீஸ்வரி, கரண் ஆகியோர்களை கோட்டை மேடு அருகில் பார்த்தோம். எங்கே செல்கிறீர்கள் என்று கேட்டனர். மருத்துவமனைக்கு செல்வதாக கூறினோம். நீங்கள் எங்கே செல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஆடு வாங்குவதற்காக கீழராமனேரி செல்வதாக சொன்னார்கள். அவர்கள் முன்னால் சென்றுவிட்டனர். நாங்கள் பின்னே சென்றோம். நான் போகும்வழியில் பாத்ரூம் போக வேண்டும் என்று கேட்டதால் இடைச்சியூரணி விலக்கு ரோட்டை தாண்டி வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே இடதுபுறம் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நான் பாத்ரூம் சென்றேன். அவ்வாறு நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து சற்று உள்ளே சென்றேன். அவ்வாறு நான் சென்றபோது யார் என்று தெரியாத மூன்று பேர் என்னை சுற்றி வளைத்தனர். அவ்வாறு சுற்றி வளைத்த நபர்கள் தான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் கருப்பு கலர் சட்டையும், மற்றவர் வெள்ளை கலர் சட்டையும், 20 வயது கூட நிரம்பாத ஒருவர் ஆகியோர்கள் தான் என்னை சுற்றி வளைத்தனர். அதில் கருப்பு கலர் சட்டை அணிந்த நபர் கத்தியை எடுத்து என்னிடம் காட்டி உன்னிடம் பணம் எவ்வளவு இருக்கிறது என்று கேட்டி மிரட்டினார். நீதிமன்றத்தில் நடுவில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நபர் அடையாளம் காட்டி அவர் பெயர் அஜித் என்று கூறுகிறார். நான் சத்தம் போட்டவுடன் என் மாமா முருகவேல் அங்கு வந்தார். மீதமுள்ள இரண்டுபேர் என் மாமாவை பிடிடா அஜித் என்று கூறினர். அப்போதுதான் அந்த நபரின் பெயர் அஜித் என்று எனக்கு தெரியும். மாமாவை பிடித்து இங்கே எதுக்கு வந்திங்க என்று கேட்டனர். நாங்கள் ஆஸ்பத்திரிக்கு செல்வதாக கூறினார்.

ஆஸ்பத்திரிக்கு செல்பவருக்கு இங்கே என்னடா வேலை என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி முருகவேல் கன்னத்தில் அஜித்தும், பாலமுருகனும் அடித்தனர். பின் என் மாமாவை கத்தியைக் காட்டி மிரட்டி சூர்யாவும், பாலமுருகனும் அழைத்து சென்றனர். என்னுடன் அஜித் உட்கார்ந்திருந்தார். அஜித்திடம் எங்களை விட்டுவிடுங்கள் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும் என்று கூறினேன். உங்கள் இருவரையும் விடவேண்டும் ஆனால் நாங்கள் சொல்வதை கேட்க வேண்டும் என்று அஜித் சொன்னார். நீங்கள் வண்ணா தேவுடியா தானே என்னோடு படுத்தாதான் விடுவேன் என்று வலுக்கட்டாயமாக கீழே தள்ளி கட்டாயப்படுத்தி என்னை பலாத்காரம் செய்துவிட்டார். எனக்கு நீ தம்பி வயது என்னை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினேன். உன் காலில் கூட விழுகிறேன் என்று கெஞ்சினேன். அஜித் உன் மாமாவை விட சொல்கிறேன் என்று சென்றுவிட்டார். பின் வெள்ளை கலர் சட்டை போட்ட முதல் நபராக நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் பின்னிட்டு விசாரித்து தெரிந்து கொண்ட பாலமுருகன் என்று அடையாளம் காட்டுகிறார். என்னை வந்து பாலமுருகன் வண்ணா தேவுடியா படுடி உன்னை என்ன பன்னாலும் யார் கேட்க போகிறார் என்று அசிங்கமாக கேட்டார். அவர் அணிந்திருந்த லுங்கி, பனியனை கழற்றிவிட்டு என்னையும் ஜாக்கெட்டை கழற்ற சொன்னார். அவனே வலுக்கட்டாயமாக என் ஜாக்கெட்டை கழற்றி பலாத்காரம் செய்து விட்டார். வாங்கடா போகலாம் என்று மூன்று பேரும் சேர்ந்து கிழம்பிவிட்டனர். இருவரையும் இப்படியே விடக்கூடாது சேர்த்து போட்டோ எடுங்கள் என்று அஜித் சொல்ல பாலமுருகன் போட்டோ எடுத்தார். இருசக்கர வாகனத்தின் முன்பு நிறுத்திவைத்து என்னையும், மாமாவையும் போட்டோ, வீடியோ எடுத்தனர்.

நாங்கள் கேட்கும்போதெல்லாம் நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் நாங்கள் உங்களுக்கும் தவறான பழக்கம் இருப்பதாக போட்டோ, வீடியோவை வெளியிட்டு விடுவோம் என்றும், வெளியே சொன்னால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினர். என் மாமாவை பிடித்து வரும்போது ரூபாய் 3000/– ஐ அஜித் பறித்துகொண்டார். அஜித் என்னை பலாத்காரம் செய்யும்போது என் ஜாக்கெட்டுக்குள் மஞ்சள் கலர் பர்ஸில் இருந்த ரூபாய் 550/– ஐ பறித்துகொண்டார். அந்த பர்ஸை தூக்கி எறிந்துவிட்டார். பிறகு நாங்கள் ஆஸ்பத்திரிக்கு செல்லாமல் வீட்டிற்கு சென்றுவிட்டோம். செல்லும்போது முதலில் பார்த்த கரண் மற்றும் முனீஸ்வரி வந்துவிட்டார்கள். அவர்கள் நடந்த விவரத்தை கேட்டனர். நாங்கள் நடந்ததை சொன்னோம். யாரிடமும் இந்த விவரத்தை கூறவேண்டாம் என்று மறைக்க நினைத்தோம். ஆனால் என் மாமா முருகவேல் விசாரித்தபோது 3 எதிரிகளும் பல வழக்குகளில் இருந்ததாக தெரிந்துகொண்டார். அதன்பிறகு எனக்கு நடந்தமாதிரி யாருக்கும் நடக்ககூடாது என்பதால் கமுதி காவல்நிலையத்திற்கு 31.01.2024 அன்று எழுத்துமூலமாக புகார் கொடுத்தேன். அந்த எழுத்து மூல புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கமுதி நீதிமன்றத்திலும் ஒரு வாக்குமூலம் அளித்தேன். அந்த குவிமுச 164ன் கீழ் நீதித்துறை நடுவரிடம் ஆஜராகி பதிவு செய்த வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மஞ்சள்கலர் பர்ஸ்தான் சம்பவ தினத்தன்று நான் வைத்திருந்ததாகவும். மேற்படி மணிபர்ஸ் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களை வீடியோ எடுத்த கருப்பு கலர் செல்போனை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் செல்போன்தான் அன்று வீடியோ எடுத்தது , அது **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னை மிரட்ட பயன்படுத்திய கத்தியை அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் கத்திகள்தான் அவை. அந்த மூன்று கத்திகள் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பர்ஸ்க்குள் எனது ஆதார் கார்டை வைத்திருந்தேன். அந்த ஆதார் கார்டு நகல் **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக கமுதி டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இல்லை

Sd/– N. Shanthi
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)